<u>**சுருக்கம்**</u>

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–17 ஆம் நிதியாண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் திட்டம் தொடராணை மற்றும் ரூ.120.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை

அரசாணை(நிலை) எண்.04

நாள்: 14–02–2017
துன்முகி, மாசி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.06, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 15–02–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண்.2655/மா.தி.ந.3.1/ 2016, நாள் 16.06.2016 மற்றும் 06.09.2016.

-----

<u>**ஆணை:**</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பை செயல்படுத்தும்விதமாக, மாற்றுத் திறனாளிகள் சிறு மற்றும் குறுந்தொழில் சுய வேலைவாய்ப்பு வங்கிக் கடன் திட்டத்தில் அதிகபட்சம் ரூ.10,000/– மானியம் அல்லது வங்கி கடன் தொகையில் 30 விழுக்காடு மானியம் அதில் எது குறைவோ, அதை மானியமாக வழங்கிடவும் இத்திட்டத்தின் கீழ் 1200 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 2015–2016 ஆம் ஆண்டின் மானிய தொகை ரூ.80.00 இலட்சத்திலிருந்து ரூ.120.00 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகள், சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் திட்டத்தில் அதிகபட்சம் ரூ.10,000/– மானியம் அல்லது வங்கி கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மானியம் அதில் எது குறைவோ அதை மானியமாக வழங்கிட அனுமதி வழங்குமாறும், மேலும், மாற்றுத் திறனாளிகள் சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் மானியம் வழங்கும் திட்டத்தில் ரூ.10,000/– மானியமாக 1200 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2016–17 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகள், சிறு மற்றும் குறுந்தொழில், சுயவேலைவாய்ப்பு வங்கி கடன் திட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிடமிருந்து மாற்றுத் திறனாளிகள் பெறும் வங்கி கடன் தொகையில் 30 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.10,000/–ஐ மானியமாக வழங்கியும், மேலும் மாற்றுத் திறனாளிகள், சிறு மற்றும் குறுந்தொழில் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் மானியம் வழங்கும் திட்டத்தில், ரூ.10,000/– மானியமாக 1200 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.120.00 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே

இருபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**4.** மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும்– 02– சமூக நலன்– 101– மாற்றுத் திறனாளிகள் நலன்– I- திட்டத்தில் சேராதது– CP – மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலைவாய்ப்பு–70 வேலைவாய்ப்பின்மை நிவாரணம்"

(து.தொ.கு.2235–02–101–CP–7008),

**5.** மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.40,00,000/– 2016–17 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2016–17 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2016–17 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(சந/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.2735/நிதி(சந)/2017, நாள் 08.02.2017ன்படி அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2049 (இரண்டாயிரத்து நாற்பத்து ஒன்பது)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**<u>நகல்:–</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.